செயற்பொறியாளர், பொபது., நீஆது., சிறப்புத் திட்டக் கோட்டம், பெருந்துறை-52
அவர்களின் செயற்முறைகள்

பிறப்பிப்பவர்: பொறி.மு.சுந்தராம்பாள், பி.இ.,
செயற்பொறியாளர் பொபது/நீஆது., (கூ/பொ)

**செ.மு.ஆ.எண். 83/நிஉ2/2019/ நாள்:06.08.2019**

பொருள்: நியமனம் - நேரடி நியமனம் - த.நா.அ.ப.தொ —— தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு - தொகுதி -IVல் அடங்கிய 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018- ஆம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு - இக்கோட்ட அலுவலகத்தில் பணியேற்றுள்ள திருமதி.நா.நித்யா (பிறந்த தேதி: 19.04.1988) அவர்களின் பணியினை வரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணையிடுதல் - குறித்து.

பார்வை:
1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீஆது மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து. சேப்பாக்கம், சென்னை -5 அவர்களின் செ.மு.ஆ.எண்.எஸ் 3(3)/25366/2019/ நாள்:25.02.2019
2. இக்கோட்ட செ.மு.ஆ.எண்.83/நிஉ2/2019/ நாள்:12.03.2019

******

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2017-2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் (தொகுதி -IV- க்கானது) தேர்ச்சி பெற்று இளநிலை உதவியாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட திருமதி.நா.நித்யா (பிறந்த தேதி: 19.04.1988) அவர்கள் பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின் அடிப்படையில் இக்கோட்டத்தில் இளநிலை உதவியாளராக 12.03.2019 மு.ப. முதல் பணியில் சேர்ந்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன் பிரிவு-28ன்படி இவரின் பணி இளநிலை உதவியாளர் பதவியில் 12.03.2019 மு.ப. பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கப்படுகிறது. இவர் இளநிலை உதவியாளர் பதவியில் மூன்று ஆண்டு கால தொடர் பணியில் தமது இரண்டு ஆண்டு காலப் பணியினை திருப்திகரமாக நிறைவு செய்தல் வேண்டும். மேலும், இத்தகுதிகாண் பருவ காலத்தில் இவர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப் பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

மேற்கண்ட பணிவரன்முறை ஆணையானது சென்னை உயர்நீதிமன்ற சென்னைக் கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நியமனம் தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்றம் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொபது/நீஆது.,
சிறப்புத் திட்டக் கோட்டம், பெருந்துறை.

பெறுநர்
திருமதி.நா.நித்யா,
இளநிலை உதவியாளர், பொபது.,
சிறப்புத் திட்டக் கோட்டம், நீஆது.,
பெருந்துறை.